

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சி ஸ்ரீரங்கம் அய்யாளம்மன் படித்துறை பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.13.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பறவைகள் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், சிறப்பான முறையில் மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையாளர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், நகர பொறியாளர் சிவபாதம், சேர்மன் துரைராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதியின் மகள் கவிதா சுப்பிரமணியனின் மகன் டாக்டர் எஸ்.நாச்சியப்பன் ரகுபதி, டாக்டர் பி.அழகம்மை ஆகியோரது திருமணம் கடந்த 7ந் தேதி நடைபெற்றதையடுத்து தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் புதுமண இணையரை அவர்களது இல்லத்தில் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ் விஜயன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் மற்றும் மணமகனின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்திட திரண்டு வாரீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி – பி.பழனியப்பன் அறிக்கை!





தருமபுரி, ஜூலை 11 -

தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்து திரளாக பங்கேற்பீர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

தருமபுரி மாவட்டத்தை மையமாக கொண்டு பல்வேறு மக்கள் நல திட்டங்களை உருவாக்கி வரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதியார் அவர்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் மக்களுடன் முதல்வர் என்ற மகத்தான திட்டத்தை தொடங்கி வைக்க இன்று (11.07.2024 - வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் பாளையம்புதூர் ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்திற்கு வருகை தர உள்ளார் அது சமயம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆலோசனைப்படி மாவட்ட எல்லையான தொப்பூர் முதல் வழிநெடுக திரளாக நின்று சிறப்பான வரவேற்பு அளிக்கும் வகையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்து சிறப்பான வரவேற்ப்பு அளித்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

## சென்னையில் ‘ஓவியச் சந்தை’

சென்னை, ஜூலை 11–

கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஓவிய மற்றும் சிற்பக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் கலைஞர்களின் ஓவியம் மற்றும் சிற்பக் கலைப்படைப்புகளைக் காட்சிப் படுத்தி, விற்பனை செய்யும் ‘ஓவியச் சந்தை’ திட்டத்தினை செயல்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையின் அடிப்படையில் சென்னையில், 2.8.2024, 3.8.2024 மற்றும் 4.8.2024 ஆகிய மூன்று நாட்கள் சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் ஓவியம் மற்றும் சிற்பக் கலைப் படைப்புகளைக் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யும் ஓவியச்சந்தை திட்டம் செயல் படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டினைச் சேர்ந்த ஓவிய, சிற்பக் கலைஞர்கள் இத்திட்டத்தில் பயன்பெற ஏதுவாக, தாங்கள் காட்சிப்படுத்தி, விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ள கலைப்படை ப்புகளின் விவரங்கள், அதற்குரிய புகைப்படங்கள், கலைப் படைப்புகளின் விற்பனைத் தொகை ஆகிய விவரங்களு டன் கூடிய விண்ணப்பத்தினை 23.7.2024க்குள், பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதல்வர்(பொ), அரசு கவின் கலைக் கல்லூரி, ஈ.வே.ரா.பெரியார் சாலை, சென்னை600 003. தொலைபேசி எண்.04425610878, விண்ணப்பங்களை கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (www.artandculture.tn.gov.in) இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இவ்வாறு கலை பண்பாட்டுத் துறை அறிவித்துள்ளது.





விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் தனது குடும்பத்துடன் அன்னியூர் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வாக்களித்தார்.

### ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி

# அரசு கலை, அறிவியல் கல்லூரியில் - மாணவர் வழிகாட்டுதல் பயிற்சி!

## ஈரோடு கழக எம்.பி. கே.இ.பிரகாஷ் சிறப்புரை!

ஈரோடு, ஜூலை 11 -

மாணவர் வழிகாட்டுதல் பயிற்சியில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.இ பிரகாஷ் அவர்கள் சிறப்புரை வழங்கினார்

மொடக்குறிச்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 03.07.2024 முதல் 10.07.2024 வரை சமூகத்தின் அனைத்து துறைகளிலிருந்தும் ஆளுமை மிக்க நபர்களை கொண்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இதில் 09.07.2024 அன்று முற்பகலில் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியில் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி சிறப்புரை வழங்கிய திருமதி.கே.அருள்மொழி, வட்டார மருத்துவ அலுவலர், மொடக்குறிச்சி, மரு. ஏ.ஹேமலதா, மருத்துவ அலுவலர், எழுமாத்தூர். திருமதி.டி.சங்கீதா, சமூக ஆர்வலர், மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம், ஈரோடு. வி.ராஜேஸ்வரன், சுகாதார ஆய்வாளர், மொடக்குறிச்சி. என்.ஜீவானந்தன். சுகாதார ஆய்வாளர், அவல்பூந்துறை. ரா. சம்பந்தம். சுகாதார ஆய்வாளர் அறச்சலூர். மற்றும் எம்.தேவராஜன், சுகாதார ஆய்வாளர். அறச்சலூர், ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்

அதனைத் தொடர்ந்து பிற்பகலில் நடைபெற்ற மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியில் ‘கல்லூரி இளைஞர்களின் உயர் கல்வி’ என்ற தலைப்பில் நடைபெற்றது.

இதில் முனைவர்.க.மூ. சபிதா, துறைத்தலைவர் வணிகவியல் துறை அனைவரையும் வரவேற்றனர். கல்லூரி முதல்வர் ஜெ. எபெனேசர் தலைமையுரை நிகழ்த்தி னார்.

மேலும் சிறப்பு விருந்தினர் அறிமுகம் முனைவர்.மு.தர்மலிங்கம். கணினி அறிவியல் துறை அவர்களால் வழங்கப்பட்டது.. இவ்வழிகாட்டுதல் பயிற்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ். தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களான நான் முதல்வன். தமிழ் புதல்வன், புதுமை பெண் போன்ற திட்டங்களை பற்றியும் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் உற்சாகம் அளிக்கும் விதத்தில் பேசினார்.

மேலும் இடைவிடா கடின உழைப்பே வாழ்வில் முன்னேற சிறந்த வழி என மாணவர்களுக்கு விளக்கி மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்து விளங்க சிந்தனையை தூண்டும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சி முடிவில் முனைவர்.அ.நல்லசிவம், துறைத்தலைவர். வணிக நிர்வாகவியல் கணினிப் பயன்பாட்டுத்துறை நன்றியுரை வழங்கினார். மேலும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. தர்மலிங்கம், கணினி அறிவியல் துறை அவர்களால் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது..

இந்நிகழ்வில் இளநிலை முதலாமாண்டு மாணவ ,மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.





ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மாணவர் வழி காட்டுதல் பயிற்சியில் ஈரோடு தொகுதி கழக நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.


சுதந்திரப் போராட்ட வீரர்
மாவீரன் அழகுமுத்துக்கோன்
அவர்களின்
பிறந்த நாள்



மாவீரர் அழகுமுத்துக்கோன் அவர்கள் தமிழ்நிலத்தின் தலைவணங்கா வீரத்துக்கும் தலைசிறந்த தியாகத்துக்கும் தன்னிகரற்ற அடையாளமாக விளங்கியவர்.
– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழ்நாடு அரசின் சார்பில்
சுதந்திரப் போராட்ட வீரர்
மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

நாள் : 11.7.2024, வியாழக்கிழமை, காலை 9.15 மணி
இடம் : எழும்பூர் இரயில் நிலையம் அருகில், சென்னை

செ.ம.தொ.இ./681/வரைகலை/2024

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in | இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.